# மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், ஊத்தங்கரை
# கிருஷ்ணகிரி மாவட்டம்

**முன்னிலை : திரு. P. சுந்தரமூர்த்தி, B.Com., LL.M.,**
**மாவட்ட உரிமையியல் நீதிபதி, ஊத்தங்கரை (மு.கூ.பொ.)**

**2026-ம் ஆண்டு ஜனவரி திங்கள் 20-ம் நாள் செவ்வாய்க்கிழமை**

## I.A.No. 02 of 2020 in O.S.No. 15 of 2020

**CNR.No.TNKI13-000016-2020**

ஜெயபால் ...மனுதாரர் / வாதி

//எதிர்//

1. லோகநாதன் (இறப்பு)
2. அமுதா
3. அபிமன்னன்
4. நாகலட்சுமி
5. விக்னேஷ்
6. அலெக்ஸ்சான்டர்
7. ஜெகநாதன்*
8. சிவா*
9. வன்னியக்கொடி* ...எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகள்

(*Amended as per order in I.A.No.11/2024 dated: 09.01.2025)

இந்த இடைமனுவானது 20.08.2025 அன்று இந்நீதிமன்றத்தின் முன்னர் இறுதி விசாரணைக்கு வந்து, மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு. K. முருகன், அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு. S. மூர்த்தி. அவர்கள் ஆஜராகியும், இரு தரப்பு வாதங்கள் கேட்கப்பட்டு, வழக்கு கோப்புக்கள் பரிசீலிக்கப்பட்டு, இந்நாள்வரை ஆய்வில் இருந்த இம்மனுவில் இந்நீதிமன்றம் வழங்கும்:

**உத்தரவு**

இம்மனுவானது கட்டளை XXXIX விதி 1 சி.பி.சி–ன் கீழ் வழக்கு சொத்தில் பிரதிவாதிகள் வாதியின் சுவாதின அனுபவத்திற்கு எந்தவித

தடை இடைஞ்சல் செய்யாதபடிக்கு தற்காலிக தடை உத்தரவு பரிகாரம் வழங்க வேண்டி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. மனுதாரரின் மனுஉரை சுருக்கம்:**

2(i). வழக்கு சொத்து முதலில் மனுதாரரின் தந்தை உத்தண்டி கவுண்டருக்கு பாத்தியப்பட்ட சொத்தாகும். உத்தண்டி கவுண்டர் அவரது குமாரர்களான மனுதாரருக்கும் மற்றும் நாகராஜ் ஆகியோருக்கு இடையே ஏற்படுத்திக்கொண்ட பாகப்பிரிவினைப் பத்திரப்படி வழக்கு சொத்துக்கள் மனுதாரருக்கு 22.03.1994-ம் ஆண்டில் பாகத்தில் ஒதுக்கப்பட்ட சொத்தாகும். மனுதாரரது பாகத்தில் பதிவு செய்யப்பட்ட பாகப்பத்திரப்படி பாகம் ஒதுக்கிக்கொடுத்து பத்திரம் பதிவு செய்த நாளிலிருந்து வழக்கு சொத்தில் மனுதாரர் சுவாதீனம் அபவித்து வருகிறார். வழக்கு சர்வே எண்ணில் 266/108-சொத்துக்கு மனுதாரரது சுவாதீன அனுபவத்தை அனுசரித்தும், பாகப்பத்திரம் அனுசரித்தும், மனுதாரரது பெயரில் பட்டா, சிட்டா, அடங்கல் ஆகிய வருவாய் துறை ஆவணங்கள் மனுதாரரது பெயரிலேயே இருந்து வருகிறது. கந்தாயம் முதலியவைகளை மனுதாரரே செலுத்தி அனுபவித்து வருகிறார். அதேபோல தாவா சர்வே எண்:266/8A, மனுதாரரது பாகத்திற்கு ஒதுக்கப்பட்டு மனுதாரர் அனுபவித்து வரும் சொத்திற்கு மனுதாரரது தந்தை உத்தண்டி கவுண்டர் பெயரிலேயே பட்டா, சிட்டா ஏற்பட்டு இருந்து வருகிறது. மனுதாரரே கந்தாயம் செலுத்தி அனுபவித்து வருகிறார்.

2(ii). மனுதாரருக்கு பாகத்தில் வந்த வழக்கு சொத்துக்களில் மனுதாரரை தவிர பிரதிவாதிக்களுக்கோ மற்ற எவருக்கோ எந்தவித பாத்தியமும், உரியும் இல்லை. வழக்கு சொத்துக்களை பொறுத்து

பிரதிவாதிகள் முற்றிலும் மூன்றாம் நபர்கள், வழக்கு சொத்து சர்வே எண். 266/10-ற்கு தெற்கில் நத்தம் சர்வே எண் சொத்தில் வீடு கட்டி குடியிருந்து வரும் 1, 2 பிரதிவாதிகளும், அதேபோல தாவா சர்வே எண்:266/8A-க்கு மேற்கில் நிலம் வைத்துள்ள 3 முதல் 6 பிரதிவாதிகளும் அக்கிரமமாக தங்களுக்கு இருக்கும் ஆள் பலத்தை வைத்து வழக்கு சொத்தில் ஆக்கிரமிப்பு செய்து அபகரிக்க முயற்சி செய்து வருகிறார்கள்.

2(iii). இறுதியாக பிரதிவாதிகள் வழக்கு சொத்து கடந்த 20.01.2020 தேதியில் வழக்கு சொத்தை ஆக்கிரமிப்பு செய்து ஓட்ட முயற்சி செய்ததை மனுதாரர் ஊர் பொதுவர்களின் துணையுடன் தடுத்து நிறுத்துவிட்டார். இருந்தும் பிரதிவாதிகள் தங்களுக்கு இருக்கும் ஆள் பலத்தை வைத்து ஆக்கிரமிப்பு செய்யாமல் விடுவதில்லை என மிரட்டி சென்றுள்ளதால் மனுதாரர் இந்த வழக்கினை நிரந்தர தடை உத்தரவு பரிகாரம் கோரி தாக்கல் செய்துள்ளார்.

**3. எதிர்மனுதாரர்களின் எதிருரை சுருக்கம்:**

3(i). மனு சங்கதிகளை மறுத்துரைத்தும், வழக்கில் குறிப்பிடப்பட்ட நிலங்கள் மனுதாரரின் தந்தை உத்தாண்டி கவுண்டருக்குச் சொந்தமானவை என்றும், 22.03.1994 அன்று செய்யப்பட்ட பாக பத்திரத்தின் மூலம் மனுதாரர் உரிமையும் பெற்றதாகக் கூறுவது முற்றிலும் பொய்யாகும். முதல் அட்டவணை (Serial No.1) நிலத்தில் மனுதாரருக்கும், அவரது தந்தைக்கும் எவ்வித உரிமையோ அல்லது அனுபவமும் இருந்ததில்லை. குறிப்பிடப்பட்ட பாக பத்திரம் போலியானதும், செல்லாததும், எதிர்வாதிகளை கட்டுப்படுத்தாததுமாகும்.

3(ii). முதல் அட்டவணை நிலம் (Survey No.266/10B – 0.40.5 ஏக்கர்) முதலில் அத்திமரம் புஞ்சை என அழைக்கப்பட்ட மிட்டா நிலமாக இருந்தது. இந்நிலத்தை 09.04.1951 அன்று பதிவு செய்யப்பட்ட விற்பனை பத்திரத்தின் மூலம் G. பெருமாள் கவுண்டர் சட்டப்படி வாங்கினார். பின்னர் நில அளவீடு செய்யப்பட்டு பட்டா, சிட்டா, அடங்கல் ஆகியவை அவரின் பெயரில் வழங்கப்பட்டன. UDR திட்டத்திலும் அவரது உரிமை அங்கீகரிக்கப்பட்டது. பெருமாள் கவுண்டர், உத்தாண்டி கவுண்டருக்கு எதிராக O.S.No.453/1991 எனும் வழக்கைத் தாக்கல் செய்தார். அந்த வழக்கு நிலுவையில் இருந்தபோது, ஊர் பெரியவர்கள் முன்னிலையில் நடந்த பஞ்சாயத்தில், உத்தாண்டி கவுண்டர் பெருமாள் கவுண்டரின் உரிமைய ஒப்புக் கொண்டார். இதன் அடிப்படையில் சமரச மனு தாக்கல் செய்யப்பட்டு 09.09.1992 அன்று வழக்கு முடிவுசெய்யப்பட்டது. அதன் பின்னர் 1995 வரை பெருமாள் கவுண்டர் எந்தத் தடையுமின்றி நிலத்தை அனுபவித்தார்.

3(iii). 1995ஆம் ஆண்டு பெருமாள் கவுண்டர் மறைந்தபின், அவரது வாரிசுகள் இடையே வாய்மொழிப் பாகப்பிரிவினை நடைபெற்றது. அதன்படி முதல் அட்டவணை நிலம் முதல் எதிர்மனுதார்ருக்கு ஒதுக்கப்பட்டது. முதல் எதிர்மனுதார்ர் 7 சென்ட் நிலத்தில் வீடும், மாட்டுத் கொட்டையும் கட்டி வசித்து வருகிறார்; மீதமுள்ள 93 சென்ட் நிலத்தில் விவசாயம் செய்து வருகிறார். பெருமாள் கவுண்டரோ அல்லது அவரது வாரிசுகளோ ஒருபோதும் இந்த நிலத்தை உத்தாண்டி கவுண்டர் அல்லது மனுதாரருக்கு விற்பனை செய்ததில்லை. இருப்பினும், வருவாய் துறையினர் முந்தைய பதிவுகளை சரிபார்க்காமல் மனுதாரருக்கு சட்டவிரோதமாக பட்டா வழங்கினர். இதனை சாதகமாக பயன்படுத்தி, 2019ஆம் ஆண்டு மனுதாரர் ஆள் பலத்தை பயன்படுத்தி 93 சென்ட்

நிலத்தை சட்டவிரோதமாக ஆக்கிரமித்து, முதல் எதிர்மனுதாரரை வெளியேற்றினார். 7 சென்ட் நிலத்தில் மட்டும் எதிர்மனுதார்ர் இன்னும் வசித்து வருகிறார்.

3(iv). மனுதாரரின் சுவாதீனம் முற்றிலும் சட்டவிரோதமானது; உண்மையான உரிமையாளருக்கு எதிராக தடை உத்தரவு கோர மனுதாரருக்கு உரிமை இல்லை. இரண்டாம் அட்டவணை நிலம் (Survey No.266/8A) தொடர்பாக, மனுதாரரும் அவரது தந்தையும் 06.08.1993 அன்று மூன்றாம் எதிர்மனுதாரரான அபிமன்னன் என்பவருக்கு பஞ்சாயத்தார் முன்னிலையில் ஒப்பந்தம் செய்து, அன்றே நிலத்தை ஒப்படைத்தனர். அன்றிலிருந்து மூன்றாம் எதிர்மனுதாரர் தனது மனைவி மற்றும் மகனுடன் கடந்த 28 ஆண்டுகளுக்கும் மேலாக இடையறாது, அமைதியாக, வெளிப்படையாக நிலத்தை அனுபவித்து வருகிறார்.

3(v). கிராம நிர்வாக அதிகாரியும், மூன்றாம் எதிர்மனுதாரர் நிலத்தை சாகுபடி செய்து வருவதாகச் சான்றிதழ் வழங்கியுள்ளார். கிஸ்தும் தொடர்ந்து செலுத்தப்பட்டுள்ளது. இதன் மூலம் மூன்றாம் எதிர்மனுதாரர் எதிரிடை சுவாதீனம் (Adverse Possession) மூலம் உரிமை பெற்றுள்ளார். இவ்விவரங்களை மனுதாரர் மறைத்து, பொய்யான குற்றச்சாட்டுகளுடன் வழக்குத் தாக்கல் செய்துள்ளார். எதிர்வாதிகள் ஆக்கிரமித்ததாக கூறப்படும் குற்றச்சாட்டுகள் முற்றிலும் பொய்யானவை. மனுதாரர் சுத்தமான கரங்களுடன் நீதிமன்றத்தை அணுகவில்லை. நிரந்தர தடை உத்தரவு கோரும் இந்த வழக்கு சட்டப்படி மற்றும் உண்மைப் படி நிலைநாட்ட முடியாதது; செலவுகளுடன் தள்ளுபடி செய்யப்பட வேண்டும்.

**4. தீர்வுகாண வேண்டிய வினா:**

4(i). இம்மனுவில் முக்கியமாக தீர்மானிக்கப்பட வேண்டியது என்னவென்றால் இம்மனுவானது அனுமதிக்கத்தக்கதா என்பதேயாகும்.

**5. சாட்சியம்:**

5(i). இம்மனுவிற்கு மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் தரப்பில் சாட்சிகள் எதுவும் முன்னிடப்படவில்லை. மனுதாரர் தரப்பில் **ம.சா.ஆ.1** முதல் **ம.சா.ஆ.10** வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. எதிர்மனுதாரர் தரப்பில் சான்றாவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

**விவாதம்:**

6. மனுதாரர் இந்த மனுவை மனுசொத்தில் மனுதாரரின் நிம்மதியான சுவாதீன அனுபவத்திற்கு எதிர்மனுதாரர்கள் எந்தவித இடையூறும் செய்யக்கூடாது என்று தற்காலிக உறுத்துக்கட்டளை வேண்டி தாக்கல் செய்துள்ளார். மனுதாரரின் வழக்குப்படி கடந்த 22.03.1994 தேதியிட்ட பாகப்பிரிவினையில் மனுதாரருக்கு மனு சொத்துக்கள் பாகமாக ஒதுக்கப்பட்டு மனு 1-ம் அயிட்ட சொத்திற்கு பட்டா, சிட்டா, அடங்கல் மனுதாரர் பெயரிலும் 2-ம் அயிட்ட சொத்திற்கு மனுதாரரின் தந்தை பெயரிலும் இருந்து வருவதாகவும், எதிர்மனுதாரர்கள் பக்கத்து நிலத்துக்காரர்கள், மனு சொத்தில் அக்கிரமமான முறையில் ஆக்கிரமிப்பு செய்ய முயற்சி செய்து வருகிறார்கள், எனவே அவர்களுக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளை வேண்டி வழக்கு தாக்கல் செய்து அதில் இடைக்கால உறுத்துக்கட்டளைக்காக இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

7. பிரதிவாதி தரப்பில பிரதிவாதி தரப்பு வழக்கானது மனு 1-ம் அயிட்ட சொத்தானது கடந்த 09.04.1959 தேதியிட்ட கிரைய ஆவணத்தின்படி பெருமாள் கவுண்டர் என்பவருக்கு பாத்தியப்பட்டது என்றும், பிரதிவாதிகள் பெருமாள் கவுண்டரின் வாரிசுகள், பெருமாள் கவுண்டர் இறந்துவிட்ட பின்பு 1-ம் பிரதிவாதிக்கு கடந்த 1995 தேதியில் வாய்மொழி பாகப்பிரிவினை மூலம் 1-ம் அயிட்ட சொத்து ஒதுக்கப்பட்டு அவரது அனுபவத்தில் இருந்துவந்தது என்றும், அதனை கடந்த 2019-ம் தேதியில் மனுதாரர் ஆக்கிரமித்துக்கொண்டுள்ளார். சர்வே எண். 266/10-ல் 1-ம் பிரதிவாதி வீடு கட்டி குடியிருந்து வருகிறார். அவர் வீடு கட்டி குடியிருந்துவரும் இடம் போக மீதம் உள்ள 93 சென்டில் மனுதாரர் சட்ட விரோதமாக ஆக்கிரமித்து சுவாதீனத்தில் இருந்துவருகிறார் என்றும் மனு 2-ம் இன சொத்து மனுதாரரின் தந்தையான உத்தண்டி கவுண்டர் என்பவர் கடந்த 06.08.1993 தேதியில் 3-ம் பிரதிவாதிக்கு ஒப்பந்தம் ஏற்படுத்தி சொத்தை ஒப்படைத்துவிட்டார் என்றும் அந்த தேதியிலிருந்து அவர் அனுபவம் செய்து வருகிறார். இந்த உண்மைகளை மறைத்து மனுதாரர் வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்று ஆட்சேபணை செய்யப்பட்டுள்ளது.

8. மனுதாரர் தரப்பில் ம.சா.ஆ.1-ஆக கடந்த 22.03.1994 தேதியிட்ட பாகப்பிரிவினை ஆவணத்தின் சான்று நகல் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அதில் மனுதாரர், அவரது தந்தை ஆகியோருக்கும் இடையில் பாகப்பிரிவினை ஏற்பட்டதாக தெரியவருகிறது. ம.சா.ஆ.2-ஆக தாக்கல் செய்துள்ள கணினி சிட்டாவில் மனு 1-ம் அயிட்ட சொத்து மனுதாரர் பெயரில் பட்டா இருந்து வருவது தெரியவருகிறது. பட்டா எண். 497-க்கு மனுதாரர் பசலி எண். 1425 மற்றும் பசலி எண். 1419 ஆகியவற்றிற்கு தீர்வை செலுத்தியதற்கான தீர்வை ரசீதுகள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

பசலி எண். 1428-க்கான அடங்கல் பதிவேடு மனு 1-ம் அயிட்ட சொத்திற்கு மனுதாரர் பெயரிலும் குறியீடு செய்யப்பட்டுள்ளது. மனு 2-ம் அயிட்ட சொத்து மனுதாரரின் தந்தை பெயரில் உள்ளதற்கான கணினி சிட்டா ம.சா.ஆ. 5-ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. பசலி எண். 1428-க்கான 2-ம் அயிட்ட சொத்திற்கு அடங்கல் பதிவேடு மனுதாரரின் தந்தை பெயரில் வழங்கப்பட்டுள்ளது.

9. 1-ம் அயிட்ட சொத்திற்கு பட்டா புத்தகமானது கடந்த 21.09.1997 தேதியில் மனுதாரரின் பெயரில் வழங்கப்பட்டுள்ளது. பட்டா புத்தகம் ம.சா.ஆ.8-ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. பசலி எண். 1432-க்கான மனு 1-ம் அயிட்ட சொத்திற்கு மனுதாரரின் பெயரில் அடங்கல் பதிவேடு ம.சா.ஆ.7-ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி ஆவணங்கள் மூலம் மனு 1-ம் அயிட்ட சொத்து மனுதாரர் சுவாதீனத்தில் இருந்துவருகிறார் என்பதை காட்டுகிறது. மனு 2-ம் அயிட்ட சொத்தில் மனுதாரர் சுவாதீனத்தில் இருந்து வருவதாகக் காட்டுவதற்கு எந்த ஆவணமும் இல்லை. அதில் மனுதாரரின் தந்தை சுவாதீனத்தில் இருந்துவருகிறார் என்பதையே காட்டுகிறது. இது எதிர்மனுதாரரின் வழக்குப்படி மனு 2-ம் அயிட்ட சொத்தை மனுதாரரின் தந்தை 3-ம் பிரதிவாதிக்கு ஒப்பந்தம் ஏற்படுத்தி அப்போதே ஒப்படைத்துவிட்டு 28 ஆண்டுகளாக அவர் அனுபவித்து வருகிறார்கள் என்பதாகும்.

10. மனுதாரர் மனு 1-ம் அயிட்ட சொத்து தனது பெயரில் பட்டா பெற்றது போல் 2-ம் அயிட்ட சொத்து ஏன் தனது பெயரில் பட்டா பெறவில்லை என்பதற்கு உரிய காரணங்கள் எதுவும் தெளிவுற கூறப்படவில்லை. மேலும் தாங்கள் பாகப்பிரிவினை

ஏற்படுத்திக்கொள்வதற்கு முன்பு மனு சொத்துக்கள் மனுதாரரின் தந்தை பெயரில் இருந்ததற்கான எந்தவித ஆவணங்களும் மனுதாரர் தரப்பில் முன்னிலைப்படுத்தவில்லை. எதிர்மனுதாரர் தரப்பு முக்கிய வாதமானது தாங்கள் 1951-ம் தேதியிலேயே மனு 1-ம் அயிட்ட சொத்தை கிரையம் பெற்று அதன் பெயரில் பட்டா பெற்று அனுபவித்து வந்ததாகவும் தற்போது மனுதாரர் மோசடியாக பட்டா மாற்றம் செய்துகொண்டுள்ளார், அக்கிரமமாக சுவாதீனம் அடைந்துவிட்டார் என்று கூறப்பட்டுள்ளது.

11. மேற்படி எதிர்மனுதாரர்களின் வாதத்தை நிரூபிப்பதற்காக எதிர்மனுதாரர் தரப்பில் எந்தவித சாட்சி சான்றாவணங்களும் முன்னிலைப்படுத்தவில்லை. எதிர்மனுதாரர் பதிலுரையில் குறிப்பிட்டுள்ள வழக்கின் உத்தரவுகளோ ஆவணங்களோ எதிர்மனுதாரர் தரப்பில் குறியீடு செய்யப்படவில்லை. மனுதாரர் மனு 1-ம் அயிட்ட சொத்தில் சுவாதீனத்தில் உள்ளார் என்பது மனுதாரர் தரப்பில் காட்டப்பட்டுள்ளது. மனுதாரரின் மகள் மேனகா என்பவர் கொடுத்த புகாரின் பெயரில் எதிர்மனுதாரர்களுக்கு எதிராக கல்லாவி காவல் நிலையத்தில் குற்ற எண். 162/2022 என்ற முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டு அந்த முதல் தகவல் அறிக்கையின் நகல் ம.சா.ஆ.1-ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி முதல் தகவல் அறிக்கையில் தங்கள் நிலத்தில் எதிர்மனுதாரர்கள் டிராக்டர் எடுத்து வந்து ஓட்டிக்கொண்டிருந்தபோது அதைக்கேட்டு தகராறு ஏற்பட்டதாக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது. முதல் தகவல் அறிக்கை மூலம் எந்த இடத்தில் எந்த நிலத்தில் இந்த தகராறு ஏற்பட்டது, மனு சொத்தில் ஏற்பட்டதா அல்லது வேறு சொத்திலா என்று எந்த விவரமும் கிடைக்கவில்லை.

12. மனு மற்றும் பதிலுரை சங்கதிகளை நன்கு பரிசீலனை செய்கையில் மனுதாரருக்கு 1-ம் அயிட்ட சொத்து பாத்தியப்படுவதற்கு முன்பு தங்களுக்கு பாத்தியப்பட்டதாக பிரதிவாதி தரப்பில் கூறப்பட்டு மனுதாரரின் உரிமைமூலமே கேள்விக்குள்ளாக்கப்பட்டுள்ளது. ஆனால் எதிர்மனுதாரர் தரப்பில் கூறப்பட்டுள்ள ஆவணங்கள் எதையும் எதிர்மனுதாரர் தரப்பில் இந்த மனுவில் குறியீடு செய்யப்படவில்லை. மனுதாரர் தற்போது மனு 1-ம் இன சொத்தில் அக்கிரமமாக ஆக்கிரமித்து சுவாதீனத்தில் இருந்து வருகிறார் என்பதை எதிர்மனுதாரர் தரப்பில் ஒப்புக்கொண்டுள்ள நிலையில் மனு 1-ம் இன சொத்தின் சுவாதீனம் மனுதாரர் வசம் உள்ளது என்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

13. ம.சா.ஆ.1 ஆவணத்தை பரிசீலனை செய்கையில் அந்த ஆவணத்தில் A அட்டவணை சொத்து மனுதாரரின் தந்தை உத்தண்டி கவுண்டர் என்பவருக்கு பாகமாக ஒதுக்கப்பட்டுள்ளது. அந்த A அட்டவணை சொத்து இந்த மனுவின் 2-ம் இன சொத்தான சர்வே எண். 266/8A ஆனது உத்தண்டி கவுண்டர் பாகத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ளது. மனுதாரர் தரப்பில் 2-ம் இன சொத்திற்கு தாக்கல் செய்யப்பட்டுள்ள சிட்டா, அடங்கல் முதலியவையும் உத்தண்டி பெயரிலேயே இருந்துவருகிறது. இதன் மூலம் 2-ம் இன சொத்து தனக்கு பாத்தியப்பட்டதாக மனுதாரர் கூறியிருந்தாலும் மனுதாரர் தாக்கல் செய்துள்ள ம.சா.ஆ.1 ஆவணத்தில் அது உத்தண்டியின் பாகத்திற்கு சென்றதாகவே தெரியவருகிறது. தற்போது அந்த சொத்தில் தான் சுவாதீனத்தில் இருப்பதை காட்டுவதற்கும் மனுதாரர் தரப்பில் எந்த ஆவணங்களும் தாக்கல் செய்யப்படவில்லை.

14. அசல் வழக்கானது பிரதிவாதிகளுக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வேண்டி மட்டுமே தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அதே பரிகாரத்தை இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரமாக மனுதாரர் இந்த மனுவில் கூறியுள்ளார். மனுதாரர் தரப்பில் மனு 1-ம் இன சொத்து தனது சுவாதீனத்தில் உள்ளதை காட்டுவதற்கான ஆவணங்கள் தாக்கல் செய்யப்பட்டிருந்தாலும் அந்த ஆவணங்கள் ஏற்படுவதற்கு முன்பு 1-ம் இன சொத்து தங்களுக்கு பாத்தியப்பட்டு இருந்து வந்தது என்று எதிர்மனுதாரர் தரப்பில் குறிப்பிட்டு மறுக்கப்பட்டுள்ளது. அதற்காக எந்தவிதமான ஆவணங்களும் எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்படாமல் இருந்துவருவதாலும் எதிர்மனுதாரர்கள் 1-ம் இன சொத்தில் மனுதாரரின் சுவாதீனத்தை ஒப்புக்கொண்டுள்ளதாலும் தாவா தீர்ப்பாகும்வரையில் மனு 1-ம் இன சொத்து பொறுத்து அவரின் சுவாதீனம் பாதுகாக்கப்பட வேண்டும், 1-ம் இன சொத்து பொறுத்து முதல்நோக்கு வழக்கும் சமநிலையும் மனுதாரர்புறம் உள்ளது, சுவாதீனத்திற்கு இடையூறு ஏற்பட்டால் ஈடுசெய்ய முடியாத இழப்பு ஏற்படும் என்று மனுதாரர்களால் நிரூபணம் செய்யப்பட்டுள்ளது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

15. எதிர்மனுதாரர் தரப்பில் மேற்படி மனுதாரர் அக்கிரமமாக 2019-ம் ஆண்டில் சுவாதீனத்தை அடைந்தார் என்று கூறப்பட்டு இருந்தாலும் மனுதாரர் தரப்பில் ம.சா.ஆ.1-ன் படியான பாகப்பிரிவினை ஆவணமும் ம.சா.ஆ.2-ன் படியான சிட்டாவும், ம.சா.ஆ.3-ன் படியான கந்தாய ரசீதுகளும், தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அவற்றை பரிசீலனை செய்கையில் ம.சா.ஆ.3-ல் 2010-ம் மற்றும் 2011-ம் ஆண்டுகளில் அவர் மனு 1-ம் இன சொத்தில் இருந்ததற்கான கந்தாயம் செலுத்தியதாக

தெரியவருகிறது. மேலும் மனு 1-ம் இன சொத்தில் மனுதாரர் சுவாதீனத்தில் இருப்பதற்கான அடங்கல் பதிவேடுகளும் குறியீடு செய்யப்பட்டுள்ளது. எனவே இந்த மனுவானது மனு 1-ம் இன சொத்து பொறுத்து மனுதாரர் கோரியவாறு இடைக்கால உறுத்துக்கட்டளை வழங்கக்கூடியது என்றும், மனு 2-ம் இன சொத்து பொறுத்து தள்ளுபடி செய்யப்படக்கூடியது என்றும் இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**முடிவாக,** இந்த மனு பகுதியாக அனுமதிக்கப்பட்டு மனு 1-ம் இன சொத்தில் தாவா தீர்ப்பாகும்வரை மனுதாரரின் நிம்மதியான சுவாதீன அனுபவத்திற்கு எதிர்மனுதாரர்கள் எந்தவித இடையூறும் செய்யக்கூடாது என்று ஒரு இடைக்கால உறுத்துக்கட்டளை வழங்கியும், மனு 2-ம் இன சொத்தை பொறுத்து இந்த மனுவானது தள்ளுபடி செய்யப்பட்டும் உத்தரவிடப்படுகிறது.

இந்த உத்தரவானது என்னால் சுருக்கெழுத்து – தட்டச்சருக்கு உரைக்கப்பட்டு, அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்டு, இன்று 2026 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 20-ம் நாள் இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

Sd/- XXXXX
மாவட்ட உரிமையியல் நீதிபதி (FAC)
ஊத்தங்கரை

**இணைப்பு**

**மனுதாரர் தரப்பு சாட்சி:** இல்லை

**மனுதாரர் தரப்பு சான்றாவணம்:**

| Exhibit | Date | Document | Remarks |
|---|---|---|---|
| ம.சா.ஆ.1 | 22.03.1994 | பாகப்பிரிவினை பத்திரம் (ஆவண எண். 377/1994) | பதிவு நகல் |

| | | | |
|---|---|---|---|
| ம.சா.ஆ.2 | 12.11.2019 | பட்டா எண். 497-க்கான கணினி சிட்டா | கணினி நகல் |
| ம.சா.ஆ.3 | --- | கந்தாயரசீதுகள் (எண்ணிக்கை - 2) | அசல் |
| ம.சா.ஆ.4 | --- | அடங்கல் | உண்மை நகல் |
| ம.சா.ஆ.5 | 29.11.2019 | பட்டா எண். 262/8A-க்கான கணினி சிட்டா | கணினி நகல் |
| ம.சா.ஆ.6 | --- | அடங்கல் | உண்மை நகல் |
| ம.சா.ஆ.7 | --- | அடங்கல் | சான்றிட்ட நகல் |
| ம.சா.ஆ.8 | --- | பட்டா பாஸ் புத்தகம் | அசல் |
| ம.சா.ஆ.9 | --- | வில்லங்கச் சான்று | நகல் |
| ம.சா.ஆ.10 | 20.12.2022 | முதல் தகவல் அறிக்கை | நகல் |

**எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி:** இல்லை

**எதிர்மனுதாரர் தரப்பு சான்றாவணம்:** இல்லை

Sd/- XXXXX

மாவட்ட உரிமையியல் நீதிபதி (FAC)
ஊத்தங்கரை